பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி - சென்னை - 4

05 09 2025 6 45

வெள்ளிக்கிழமை காலை

## தலைப்புச் செய்திகள்

- குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, தேசிய நல்லாசிரியர் விருதுகளை புதுதில்லியில் இன்று வழங்குகிறார்.

- சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் வளர்ச்சி அடைந்த இந்தியாவுக்கான வலுவான அடித்தளத்தை அமைத்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- தூத்துக்குடி வ.உ.சி. துறைமுகத்தில் பல்வேறு முக்கிய திட்டங்களை மத்திய அமைச்சர் திரு. சர்பானந்த சோனாவால் இன்று தொடங்கி வைக்கிறார்.

- உடல் உறுப்பு தானத்தில் நாட்டிலேயே முன்னணி மாநிலமாக தமிழகம் திகழ்கிறது என்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

- ஆசிய கோப்பை ஹாக்கி போட்டியில் இந்தியா, 4-1 என்ற கோல் கணக்கில் மலேசியாவை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் –

<<<<>>>>

ஆசிரியர் தினம் நாடு முழுவதும் இன்று கொண்டாடப்படுகிறது.

மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவரும் தலைசிறந்த கல்வியாளருமான டாக்டர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணனின் பிறந்த தினம் ஒவ்வொரு ஆண்டும் ஆசிரியர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்நாளையொட்டி புதுதில்லியில் இன்று நடைபெறும் நிகழ்ச்சியில் தேசிய நல்லாசிரியர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்ட 45 ஆசிரியர்களுக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு விருதுகளை வழங்கி கௌரவிக்கிறார்.

சென்னை மயிலாப்பூரைச் சேர்ந்த ரேவதி பரமேஸ்வரன், திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டையைச் சேர்ந்த விஜயலட்சுமி ஆகியோரும் குடியரசுத் தலைவரிடம் இருந்து இன்று விருதுகளைப் பெறவுள்ளனர்.

இந்த விருதைப் பெறுவது மகிழ்ச்சி அளிப்பதாக ஆசிரியை விஜயலட்சுமி எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(வாய்ஸ் பைட் - விஜயலட்சுமி - 45 செகண்ட்ஸ்)

<<<<>>>>

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் வளர்ச்சி அடைந்த இந்தியாவுக்கான வலுவான அடித்தளத்தை அமைத்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இது குறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதில் சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் முக்கியப் பங்காற்றும் என்றும் தெரிவித்துள்ளார்.

நாட்டின் நிதிக் கட்டமைப்பை மறு சீரமைக்கும் நோக்கில் கடந்த 11 ஆண்டுகளில் பொருளாதார சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

மக்கள் நலனை அடிப்படையாகக் கொண்டு தனிநபர் வருமான வரி சீர்திருத்தங்கள், பெருநிறுவன வரி குறைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வரி சீரமைப்பு நடவடிக்கைகள் நிதிநிலையை வலுப்படுத்தி உலகளாவிய நம்பிக்கையை அதிகரிக்கும் என திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<>>>>

இதனிடையே சரக்கு மற்றும் சேவை வரி விகிதங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது என்று பல்வேறு தொழில்துறை அமைப்புகள் தெரிவித்துள்ளன.

பொதுமக்களுக்கு இது பெரிதும் பயனளிக்கும் என்று மதுரை மாவட்ட சிறு, குறு தொழில்கள் சங்கத்தின் மடிட்சியா தலைவர் திரு. கோட்டீஸ்வரன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(Voice Byte - கோடீஸ்வரன் - 29 Sec)

<<<<>>>>

தூத்துக்குடி வ.உ.சி துறைமுகத்தில் பல்வேறு முக்கிய திட்டங்களை மத்திய அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் இன்று தொடங்கி வைக்கிறார்.

பிற்பகல் தூத்துக்குடியில் நடைபெறும் நிகழ்ச்சியில் பல்வேறு திட்டப் பணிகளுக்கும் அவர் அடிக்கல் நாட்டவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - தூத்துக்குடி லட்சுமணன் - 51 செகண்ட்ஸ்)

<<<<>>>>

உடல் உறுப்பு தானத்தில் நாட்டிலேயே முன்னணி மாநிலமாக தமிழகம் திகழ்கிறது என்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், 2008-ம் ஆண்டுக்குப் பிறகு இது வரை 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உடல் உறுப்பு தானம் செய்துள்ளதாகத் தெரிவித்தார்.

(வாய்ஸ் பைட் - மா. சுப்பிரமணியன் - 32 செகண்ட்ஸ்)

<<<<>>>>

நீர் மேலாண்மையில் திமுக அரசு கவனம் செலுத்தவில்லை என்று அஇஅதிமுக பொதுச் செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் பிரச்சாரம் மேற்கொண்டு பேசிய அவர், முந்தைய அஇஅதிமுக ஆட்சிக் காலத்தில் காவிரி - குண்டாறு திட்டம் கொண்டுவரப்பட்டதாகவும் அதன் ஒரு பகுதியாக வைகை அணை நிரப்பும் திட்டம் செயல்படுத்தப்பட்டதாகவும் கூறினார்.

ஆனால் இத்திட்டத்தை தற்போது திமுக அரசு கிடப்பில் போட்டுள்ளதாக திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

**<<<<>>>>**

தூய்மைப் பணியாளர்கள் மீது தமிழக அரசு மீண்டும் அடக்குமுறை நடவடிக்கையை மேற்கொண்டது கண்டனத்துக்குரியது என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

இது குறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி போராட்டம் நடத்திய தூய்மைப் பணியாளர்கள் மீது ஏற்கெனவே அடக்குமுறை நடவடிக்கை கையாளப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

மீண்டும் அறவழியில் போராட்டத்தைத் தொடர்வது குறித்து ஆலோசித்த தூய்மைப் பணியாளர்களை திமுக அரசு கைது செய்துள்ளதாதகவும் அங்கிருந்த செய்தியாளர்களும் அவமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாமல் ஜனநாயக உரிமைகளை முடக்கும் போக்கு கண்டனத்திற்குரியது என்று திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

**<<<<>>>>**

ஜமைக்காவில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தற்போதைய பிரதமர் திரு. ஆண்ட்ரூ ஹால்னஸ், மூன்றாவது முறையாக வெற்றி பெற்று மீண்டும் ஆட்சி அமைக்கவுள்ளார்.

------------

ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 200ஆக அதிகரித்துள்ளது.

------------

அரசுமுறைப் பயணமாக ஐஸ்லாந்து சென்றுள்ள வெளியுறவுத் துறை இணையமைச்சர் திரு. கீர்த்தி வர்தன் சிங் அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் திருமதி Katrin Gunnarsdottir உடன் இருதரப்பு பேச்சு நடத்தினார்.

------------

புதுதில்லியில் நடைபெற்ற தேசிய ஆயுஷ் இயக்கம் தொடர்பான இரண்டு நாள் மாநாடு நேற்று நிறைவடைந்தது.

------------

கப்பலோட்டிய தமிழர் வ.உ. சிதம்பரனாரின் 154-வது பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

------------

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி ரயில் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணிகள் குறித்து தெற்கு ரயில்வேயின் திருச்சி கோட்ட மேலாளர் திரு. பாலக்ராம் நெகி ஆய்வு மேற்கொண்டார்.

------------

கன்னியாகுமரி மாவட்டம் அழகப்பபுரம் பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் குடிநீர் திட்டப் பணிகள் குறித்து மாவட்ட ஆட்சியர் திருமதி அழகு மீனா ஆய்வு மேற்கொண்டார்.

------------

ராமநாதபுரத்தில் கண்தான விழிப்புணர்வுப் பேரணியை மாவட்ட ஆட்சியர் திரு. சிம்ரன்ஜித் சிங் காலோன் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

------------

வருமான வரி விலக்கு பெறுவது குறித்த விளக்கக் கூட்டம் வருமான வரித்துறை சார்பில் திருவண்ணாமலையில் நடைபெற்றது.

------------

சென்னை திருவிக நகர் பகுதியில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை மாநில அமைச்சர் திரு. சேகர்பாபு ஆய்வு செய்தார்.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய கோப்பை ஹாக்கி போட்டியில் இந்தியா, மலேசியாவை வென்றது.

பீஹாரின் ராஜ்கிரில் நடைபெற்று வரும் இப்போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் 4-1 என்ற கோல் கணக்கில் இந்தியா வெற்றி பெற்றது.

நாளை நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா - சீனாவை எதிர்கொள்கிறது.

------------

சீனாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் விஷ்ணுவர்தன் - ரஷ்யாவின் Ivan Denisov இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-7, 6-3, 10-2 என்ற செட் கணக்கில் சீனாவின் Yuquan - Zekai இணையை வென்றது.

<<<<The End>>>>